Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 469/2025
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 01 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கல்யானகுமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு.வேணுகோபால் | தொழில் | தலைமைக்காவலர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 36 |
| எதிரி ஆஜர் | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 16th day of 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.1திரு. கல்யானகுமார் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பத்தூர் கலால் பிரிவில் தலைமைக்காவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.11.2023 அன்று காலை 9.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திருமதி சிவண்யா தலைமையில் நானும் முதல் நிலைக்காவலர் திரு.ஜெகன் என்பவரும் திருப்பத்தூர் கௌதம் பேட்டை மார்கம் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து பணி மேற்கொண்டிருந்தோம். அப்போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரி அவரது வீட்டிடம் நின்றவர் எங்களை கண்டதும் ஓடினார். பின்னர் அவரை மடக்கி பிடித்து விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால். அவர் இருந்த இடத்தை சோதனை செய்த போது Dimond XXX Rum- 3 மற்றும் OLD Scret STrong XXX Rum 96 பாக்கெட்டுகள் வைத்திருந்தார். மேலும் அந்த பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக அவர் கூறியதால் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வரததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார்

செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். ( **அந்த கைபப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 01 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) பின்பு காவல் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

. காவல் நிலையத்தில் இருந்து காலை 9.00 மணிக்கு சென்றோம். மூன்று நபர்களும் மூன்று இருசக்கர வாகனத்தில் சென்றோம். எங்கு ரோந்து பணியில் ஈடுபட்டேம் என்றால் கௌதம் பேட்டையில் ஈடுபட்டேம். ரோந்து பணிக்கு சென்ற போது பேருந்து டிப்போ அருகே சற்று நேரம் இருந்து விட்டு சென்றோம். எதற்காக அங்கு இருந்தீர்கள் என்றால். அந்த வழியாக தான் எதிரி தன் வீட்டிற்கு செல்வார் அதனால் அங்கு இருந்தோம். எதிரியின் வீடு முன்பே தெரியுமா என்றால் தெரியாது, இரகசிய தகவல் கிடைத்ததால் சென்றோம். கௌதம் பேட்டையில் சுமார் 250 வீடுகள் இருக்கும். அங்கு அனைத்துவிதமன வீடுகளும் இருக்கம் என்றால் சரிதா்ன. பேருந்து டிப்போ தான்டியதியதில் இருந்தே வீடுகள் ஆரபித்துவிடும் என்றால் சரிதான். அந்த பகுதியில் உள்ள சிலருக்கு நாங்கள் போலீசார் என்ற விவாரம் தெரியும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் என்னை சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார். எனது வாக்குமூலத்தை சம்பவ இடத்தில் வைத்தே தட்டச்சு செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றபட்ட மதுபானத்தின் வரிசை எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் புள்ளிவிவரத்திற்காக தொடுத்த வழக்கிற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த வித சம்பதம் இல்லை என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.1

Tirupattur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 469/2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 03 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி. சிவன்யா | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. செல்வவேல் | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | | மதம் | |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 16th day of February 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- ( எதிரி ஆஜர் )**

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் மூங்கில்துறைபபட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.11.2023 அன்று காலை 9.00 மணிக்கு நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது திருப்பத்தூர் நகர எல்லைக்குட்பட்ட கௌதம்பேட்டையில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்டபோது இவ்வழக்கின் எதிரி எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை விசாரித்தபோது, அவரிடம் Dimond XXX Rum- 3 மற்றும் OLD Scret STrong XXX Rum 96 பாக்கெட்டுகள் அவர் விற்பனைக்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி பொருட்களை என்னுடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த காவலர் Gr-I PC 629 திரு. கல்யாணகுமார் மற்றும் முதல் நிலைக்காவலர் திரு. ஜெகன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்குஉட்படுத்தினேன். பின்பு அ.சா.1, 2 சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கு சான்று பொருள் அ.சா.பொ.1 நீதிமன்றத்தில் படிவம் -95 மூலம் ஆஜர் செய்து எனது விசாரணை முடித்து எதிரி மீது தமிழ்நாடு

மதுவிலக்கு சட்டம் பிரிவுகள் 4(1)(a), 4(1)(h)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 02 ஆகவும், படிவம்-95 அ.சா.ஆ. 03 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாணை**

முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன் என்றாலும், நான் தான் புகார்தாரர் என்றாலும் நான் தான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றாலும் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகசர் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியை பிடித்ததாக கூறும் இடமானது கூட்ட நெரிசல் மிக்க பகுதி என்றாலும், அருகாமையில் பல வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அங்குள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்க வில்லை என்றால் யாரும் முன்வரவில்லை. அவ்வாறு அவ்விடத்தில் யாரும் முன்வராததால் அவர்கள் மீது நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான்கூறுவது போல் எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும், புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடம் இருந்து எந்த வழக்கு பொருளும் கைப்பற்றபட வில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் எந்த இடத்தில் பொருட்கள் கைப்பற்றபட்டது என்று சரியாக குறிப்படவில்லை என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No. 1
Tirupattur.